**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**

**காணொளிகாட்சி விசாரணை (Video Conference)**
**ஆணை நாள்: 04.06.2025**

**முன்னிலை**
**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

..............

**வழக்கு எண். SA14387/F/2024**

திரு. M.சுபாஷ் ... மனுதாரர்

/ எதிர் /

பொது தகவல் அலுவலர்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட்
விருதுநகர் மண்டலம், 6/377, சின்னமூப்பன்பட்டி,
மதுரை ரோடு விருதுநகர் - 626001 ... பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. M.சுபாஷ் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012 விதி 7-ன் படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.G. கண்ணன், பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாகம் மற்றும் சட்டம்), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட், விருதுநகர் மண்டலம், 6/377, சின்னமூப்பன்பட்டி, மதுரை ரோடு விருதுநகர் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 22.07.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், to please provide the relevant information about the Government City buses plying from Rajapalayam bus depot to various villages in Rajapalayam Taluk limits as per format attached

with this application என்பது போன்ற தகவல்களை 4 இனங்களில் வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காத காரணத்தால் மனுதாரர் 30.08.2024 நாளிட்ட பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் 04.11.2024 நாளிட்ட பிரிவு 19(3)இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரியுள்ள தகவல்களை ஏற்கனவே 05.09.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாகவும், மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் தொகுத்து வழங்க வேண்டிய தகவல்களாக உள்ளது எனவும், மனுதாரர் கோரும் படிவத்தில் புதிதாக தகவல்களை தயார் செய்து வழங்க வழிவகை இல்லை என ஆணையத்தில் தெரிவித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க மனுதாரர் கோரியுள்ள தகவல்களை அலுவலக கோப்பில் உள்ளவாறு விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் ஆஜராகாத காரணத்தால், மனுதாரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், மனுதாரர் கோரும் படிவத்தில் புதிதாக தகவல்கள் தயார் செய்து வழங்க வழிவகை இல்லை. மேலும், மனுதாரர் பிரிவு 6(1)இல் கோரும் தகவல்களுக்கு பொதுத் தகவல் அலுவலரின் அலுவலக கோப்பில் உள்ள முழுமையான தகவல்கள் மட்டுமே வழங்கப்படும். எனவே, இன்றைய விசாரணையில் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் வழங்கி கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

- *மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள முழுமையான தகவல்களை அலுவலக கோப்புகளில் உள்ளவாறு <u>“தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது” என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகலினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.*

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA14387/F/2024</u>**

**<u>பெறுநர்</u>**

பொது தகவல் அலுவலர்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட்
விருதுநகர் மண்டலம், 6/377, சின்னமூப்பன்பட்டி,
மதுரை ரோடு விருதுநகர் - 626001

**<u>மனுதாரர்</u>**

திரு. M.சுபாஷ்,
1/206, Melurduraisamy Puram
Sokkanathan Puttur Post
Rajapalayam Taluk
Virudhunagar - 626121,

Copy to: Judgement File/ Spare.
JE / PA 04.06.2025.